දුරකථන / தொலைபேசி / Telephone ) 2698475 ) 2698490 ) 2698507
ෆැක්ස් / பெக்ஸ் / Fax ) 2692913 ) 2694860 )
විද්‍යුත් තැපෑල / மின்னஞ்சல் முகவரி / e- mail )
වෙබ් අඩවිය / இணையத்தளம் / website ) www.health.gov.lk

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය / எனது இல / My No. ) NPTCCD/Presum - cir/ 2019/1
ඔබේ අංකය / உமது இல / Your No )
දිනය / திகதி / Date ) 27/04/2019

# සෞඛ්‍ය, පෝෂණ හා දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதாரம், போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

**பொது சுற்றறிக்கை இலக்கம் :- 01-27/2019**

சகல மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர்கள்
சகல மாகாண / மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர்கள்
சகல மாகாண / மாவட்ட உதவி சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்
பணிப்பாளர்கள் விசேட செயற்திட்டம் / பணிப்பாளர் சுகாதார வைத்திய நிறுவனம்
வைத்திய நிறுவனங்களின் தலைவர்கள் / மாவட்ட வைத்திய அதிகாரிகள் / வைத்திய அதிகாரிகள்
பிரதான சுகாதார வைத்திய உத்தியோகத்தர் / கொழும்பு மாநகர சபை

<u>காச நோயை 2025 ஆண்டளவில் இலங்கையில் இல்லாதொழித்தல்: காசநோய்க்குரிய நோய் அறிகுறிகளை கொண்டவர்களை பரிசோதிப்பதற்கான செயற்பாட்டை ஊக்குவித்தல்</u>

சுகாதார ,போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் இயங்கும் காச நோய் கட்டுப்பாடும்,மார்பு நோய்களுக்குமான தேசிய செயற்திட்டம் **2025** ஆண்டளவில் காச நோயை இல்லாதொழித்தல் என்ற இலக்கை அடைவதற்கு வலுவுடன் செயற்பட்டு வருகின்றது.இவ் இலக்கை அடைவதற்கு தற்பொழுது மேற்கொள்ளப்படும் நோயாளர்களை இனங்காணல், மற்றும் நோயாளர்களுக்கான பரிசோதனை ,சிகிச்சை என்பன மேலும் திறம்பட செயற்படுத்தப்பட வேண்டும்.காச நோய்க் கட்டுப்பாட்டில் இலங்கை எதிர்கொள்ளும் ஒரு முக்கிய பிரச்சினையாக அமைவது மதிப்பீடுகளின் மூலம் நிர்ணயம் செய்யப்பட்ட வருடமொன்றுக்கான ***13000*** நோயாளர்களுடன் ஒப்பிடப்படும்பொழுது வருடமொன்றுக்கு இனங் காணப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை ***4000*** வரை குறைவாக அமைவதாகும். எனவே காசநோய்க்குரிய நோய் அறிகுறிகள் கொண்டவர்கள் என இனங்காணப்பட்டவர்கள் பொருத்தமான பரிசோதனைகள் மூலம் பரிசோதிக்கப்படுவது இன்றியமையாததாகும்.

காசநோய்க்குரிய நோய் அறிகுறிகள் கொண்டவர் என இனங்காணப்பட்டவர் முக்கியமாக இரண்டு கிழமைகளுக்கு மேலான இருமல் உடைய ஒருவர் ஆவார். காசநோய் அறிகுறிகள் கொண்டவர்களை பரிசோதிப்பதற்கான அண்மைய பரிந்துரைகள் சளிப்படல மாதிரி பரிசோதனையையும் நெஞ்சு பிரதேசத்திற்கான எக்ஸ் கதிர்

பரிசோதனையையும் விசேடமாக சிபாரிசு செய்கின்றது. ( **அநுபந்தம் 1: காசநோய் நிர்ணய வழிகாட்டி** ) இத்துடன் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் காசநோய் அறிகுறிகளை கொண்டவர்கள் என இனங்காணப்பட்டவர்களை பதிவு செய்ய **Presumptive TB** register எனப்படும் பதிவேட்டு புத்தகம் நடாத்தப்பட வேண்டும். கணிபீடுகளின்படி நாள்தோறும் வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களில் 2% ஆனவர்கள் காசநோய்க்குரிய நோய் அறிகுறிகளை கொண்டவர்கள் என இனங்காணப்படவேண்டும். சளிப்படல பரிசோதனை தெரிந்தெடுக்கப்பட்ட வைத்தியசாலைகளில் உள்ள சளிப்படல பரிசோதனை நிலையங்களிலோ மார்புநோய் சிகிச்சை நிலையத்தின் சளிப்படல பரிசோதனை நிலையத்திலோ மேற்கொள்ளப்படுகின்றது. தற்பொழுது தெரிந்தெடுக்கப்பட்ட வைத்தியசாலைகளில் உள்ள சளிப்படல பரிசோதனை நிலையங்கள் போதிய அளவு நோயாளர்கள் இனங்காணப்படாமையினால் மிகவும் குறைந்த அளவு சளிப்படலங்களையே தினமும் பரிசோதனைக்கு உட்படுத்துகின்றன. (**அநுபந்தம்** II: **தெரிந்தெடுக்கப்பட்ட சளிப்படல பரிசோதனை நிலையங்களின் பட்டியல்**).

வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவு, சிறுவர் விடுதி **(Paediatric Ward)** மற்றும் மருத்துவ நோயாளர்களுக்கான விடுதிகளில் **(Medical ward)** சகல தரப்பிலுமான சுகாதார சேவையாளர்களை பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

01) காசநோய் அறிகுறிகள் கொண்டவர்களை சளிப்படல பரிசோதனை, எக்ஸ் கதிர் பரிசோதனை மூலம் பரிசோதனை செய்யவும்.சளிப்படல மாதிரி பரிசோதனை நிலையங்கள் அற்ற வைத்தியசாலைகள் சளி மாதிரிகளை சேகரித்து அருகில் உள்ள சளிப்படல மாதிரி பரிசோதனை நிலையங்களில் கையளிக்க வேண்டும்.

02) காசநோயினால் அதிகம் பாதிக்கப்படக்கூடியவர்களான ஆண்கள், வயோதிபர், நீரிழிவு நோய் கொண்டவர்கள்,சிறுநீரக நோயாளிகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த தன்மையுடைய எந்நோயாளர்களும் காசநோய்க்குரிய எந்த ஒரு நோய் அறிகுறியும் காணப்பட்டால் (உதாரணம்: இருமல்- இருமலுக்கான காலம் முக்கியமானதல்ல) சளிப்படல பரிசோதனை, எக்ஸ் கதிர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

03)வெளிநோயாளர் பிரிவில் காசநோய்க்குரிய அறிகுறிகள் கொண்டவர் என இனங்காணப்படும் நோயாளிக்கு எக்ஸ் கதிர் பரிசோதனை பரிந்துரைக்கப்பட்டால் அதனை மேற்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

04) வெளிநோயாளர் பிரிவில் Presumptive TB register நடாத்தப்படுவதுடன் (**அநுபந்தம்** III: **மாதிரி** Presumptive TB register) அதன் பதிவுகள் சளிப்படல நிலையத்தில் நடாத்தப்படும் பதிவேட்டுடன் தினமும் ஒப்பிட்டு பார்க்க பொருத்தாமான ஒழுங்குகள் மேற்கோள்ளப்பட வேண்டும். Presumptive TB register இல் பதியப்பட்ட ஆனால் சளிப்படல பரிசோதனை பதிவேட்டில் இடம்பெறாத

நோயாளியை இனங்கண்டு பரிசோதனைக்கு அழைத்து வர ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

05) Presumptive TB register நடாத்தப்படுவதற்கு ஏற்பான ஒழுங்குகளை வெளிநோயாளர் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மேற்கொள்ள வேண்டும்.

காசநோயை 2025 ஆண்டளவில் இலங்கையில் இல்லாதொழிப்பதற்கான செயற்பாட்டில் உமது பங்களிப்புமிகவும் போற்றத்தக்கது என்றால் மிகையாகாது. மேலதிக விபரங்கள் தேவைப்படின் காசநோயக்கட்டுப்பாடும் மற்றும் மார்பு நோய்களுக்குமான தேசிய செயற்திட்டம் (தொலைபேசி : 0112368386) அல்லது உமது மாவட்டத்தில் உள்ள மார்புநோய் சிகிச்சை நிலையத்தினை (**அநுபந்தம் IV: மார்பு நோய் சிகிச்சை நிலையங்களும் தொலைபேசி இலக்கங்களும்** ) தொடர்பு கொள்ளவும்.

.................................................

வைத்தியர் : அனில் ஜாசிங்க
சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

**Dr. Anil Jasinghe**
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine,
"Suwasiripaya"
385 Rev Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.